# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க் கிழமை, 1983 பிப்ரவரி 8, தை 26,
துந்துபி திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ்கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''கடன் அறிந்து காலம் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை''

தான் மேற்கொண்டுள்ள செயலின் தன்மையை மனத்திற் கொண்டு அதனை முடித்தற்கு ஏற்ற சமயத்தையும் கருத்தில் கொண்டு, இவற்றையெல்லாம் நன்கு சிந்தித்துப் பார்த்துச் சொல்ல வேண்டிய செய்தியை நயமாக எடுத்துரைப்பவனே சிறந்த அதிகாரி ஆவான்.

I. வினாக்கள் விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்,

பைக்காரா மின் திட்டத்தில் செயல்பட்டு வரும்
ஆலோசனைக் குழு.

*வினா எண். 172—திரு. கு. ரமணி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் பைக்காரா மின் திட்டத்தில் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகளும் கொண்ட ஆலோசனைக்குழு செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அது எப்பொழுது அமைக்கப்பட்டது?

(இ) இதுவரையில் எத்தனை கூட்டங்களை நடத்தியுள்ளது?

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) 1979 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மின் திட்ட அளவிலும், 1981-ம் ஆண்டு மார்ச் மாதம் கோட்டங்கள் அளவிலும், ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| (இ) 1 | மின் திட்ட அளவிலான ஆலோசனைக் குழு கூட்டம் | 5.11-79 |
| 2 | தெற்கு கோட்ட கூட்டம் | 7-8-81 |
| 3 | வடக்கு கோட்ட கூட்டம் | 31-8-81 |
| 4 | கிழக்கு கோட்ட கூட்டம் | 5-11-81 |

திரு கோவைத்தம்பி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டம் மாதத்திற்கு ஒன்று என்று நடக்கின்ற முறையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்துவார்களா? அதே மாதிரி எல்லா மாவட்டங்களிலும் இப்படி சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய கூட்டத்தைக் கூட்ட அரசு முன் வருமா? பரவலாக தமிழ்நாட்டில் இருக்கின்ற மின் பற்றாக் குறையை இந்தக் குழு கூட்டத்தில் சிபாரிசு செய்து மத்திய அரசுக்கு அனுப்ப அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கோட்ட அளவிலே இந்தக் குழு நியமிக்கப்பட்டிருப்பது அந்தக் கோட்ட அளவிலே உள்ள அந்த மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்குத் தான். மற்றபடி உற்பத்தி திட்டங்களைப் பொறுத்த அளவில் மாநில அளவில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். மாதந்தோறும் கடைசி திங்கட்கிழமை அன்று அந்தக் கூட்டத்தை கூட்டவேண்டுமென்று மின் வாரியம் உத்தரவிட்டு இருக்கிறது. அந்தக் கடைசி திங்கட்கிழமை அன்று விடுமுறை வருமானால் அடுத்த நாளிலே அந்தக் கூட்டத்தை வைத்துக் கொள்கிறார்கள். இதிலே ஒரு வருந்தத்தக்க தகவல் என்னவென்றால் இந்தக் கூட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் வருவதில்லை என்ற குறைகள் இருக்கின்றன. (குறுக்கீடு). சில இடங்களில் வருகின்றார்கள். பெரும்பாலான இடங்களில் அதிகாரிகள் மட்டும் கூடிக்கூடி கலைய வேண்டியிருக்கிறது. நான் கேட்டுக்கொள்வதெல்லாம் தயவு செய்து சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டங்களில் முழு அளவில் கலந்துகொண்டு அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலோசனைக் கூட்டம் ஒவ்வொரு கோட்டத்திலேயும் அமைக்கப்பட்டு இருப்பது உண்மைதான். ஆனால் இந்தக் கூட்டம் முறையாக கூட்டப்படவில்லை என்பதுதான் நான் அறிந்த உண்மை. இதிலே சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சரியாக போவதில்லை என்று இங்கே சொல்லப்பட்டது. அதற்கு முழுமையான காரணம் என்னவென்றால், அந்தக் கூட்டங்களிலே சொல்லக்கூடிய ஆலோசனைகளை ஒரு சிறிதளவாவது ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவில் இங்கே ஒரு ஏற்பாடு இருந்தால் பரவாயில்லை. நாம் சொல்வதை ஏற்றுக்கொள்வதில்லை, அதனாற் அங்கே போய் எந்தப் பயனும் இல்லை என்று நினைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

சத்யமேவ ஜயதே / வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1983 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கோட்ட மின்வாரிய அதிகாரிகள் அளவிலே தீர்க்க வேண்டியவைகளை அவர்களே தீர்க்கலாம். அவர்களுடைய அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட பிரச்னைகளைப் பொறுத்த வரையில் மேலே வரவேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல் கோட்ட அளவில் அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமானாலும் நாங்கள் கொடுக்கத் தயார். ஆனால் இந்தக் கோட்ட அளவிலே நடைபெறுகின்ற அந்தக் கூட்டங்கள் நல்ல முறையிலே நடைபெறவேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம்.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தைப் பொறுத்த அளவில், அங்கே கூடுகின்ற கூட்டத்தில் நாங்கள் சொல்லக்கூடிய ஆலோசனைகளைப் பரிசீலனை செய்து அடுத்த கூட்டம் தொடங்குவதற்கு முன்னால் பதில் உரைகள் தந்து எங்களுக்கு மதிப்பளித்து வருகிறார்கள். அந்த ஆலோசனைக் கூட்டத்திலே சொல்லப்பட்ட பல கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்ற காரணத்தால், அந்தக் கூட்டத்திலே 2 உறுப்பினர்கள், அதாவது கன்ஸுமர்ஸ் சார்பாக—தொழிற்சாலையைச் சேர்ந்த ஒருவரும் சாமர்ஸ் காம்ப்ளக்ஸ் போன்ற நிறுவனங்களைச் சார்ந்த ஒருவரும்—பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தக் குழு போடப்பட்டதன் முக்கிய நோக்கமே ஊராட்சி தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள் இல்லாத சூழ்நிலையில் ஆங்காங்கே உள்ள கிராமங்களில் தெருவிளக்கு எரிவது இல்லை. அல்லது மின்சாரம் சரியாக வருவது இல்லை போன்ற நிலைமைகள் இருக்கலாம். ஏனென்றால் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள நிலைமைகள் வேறாக இருக்கலாம் என்பதால் ஆங்காங்கே உள்ள டிவிஷனல் இன்ஜினீயர்களை வைத்து அந்த மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும். அதற்கு உறுதுணையாக மக்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் அதிகாரிகள் காரியம் ஆற்றவேண்டும் என்ற அடிப்படையில் அந்தக் குழு அமைக்கப்பட்டது. ஆகவே, அதில் தொழில் நிறுவனங்களைச் சார்ந்தவர்களையோ அல்லது வணிக நிறுவனத்தைச் சார்ந்தவர்களையோ சேர்த்தால், பின்னர் அதில் பல்வேறு வகையான மக்களுக்கு இடம் கொடுக்கவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்திவிடும். அதற்குப் பிறகு அது ஒரு எம். எல். ஏ-க்கள் அடங்கிய குழுவாக இருக்காது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இப்போதுள்ள மின்சார நெருக்கடி சூழ்நிலையில் மக்கள் பிரதிநிதிகள் அலுவலர்களோடு விவாதித்து முடிவுகளை எடுப்பது என்பது சிறப்பாகத் தான் இருக்கும். இருப்பினும் இதிலே சில நடைமுறை சிக்கல்கள் இருக்கின்றன. அந்தக் குழு தொடர்ச்சியாக சிறப்பாக, சீராக

நடைபெறவில்லை என்ற குறை உண்மை. அங்கே நடைபெறும் கூட்டங்களைப் பற்றி தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு ரிக்கார்டுகள் அனுப்பி, அதை வைத்து அவர்கள் ஏற்பாடுகளைச் செய்வது என்ற முறையில் இருந்தால், அந்த ஆலோசனைக் குழு கூட்டங்கள் வெற்றிகரமாக இருக்கும். அந்த வகையில் அதை நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, வெற்றிகரமாக நடத்தவேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மேல்மட்ட அதிகாரிகளின் துணை தேவை என்றாலும் மேல்மட்ட அதிகாரிகளின் துணை கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். எந்தெந்தத் தேதியில் குழுக் கூட்டம் நடைபெற்றது, யார் யார் அதிலே கலந்து கொண்டார்கள், யார் யார் கலந்துகொள்ளவில்லை என்ற விவரங்களை கையிலே வைத்துக்கொண்டுதான் நான்பேசுகிறேன். நம்முடைய நோக்கம் நிறைவேற வேண்டும் என்பதற்குத்தான் குறிப்பிட்டேன். சில இடங்களில் நடைபெறுகிற கூட்டங்களில் பெரும்பாலான நேரங்களில் அதிலே மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்வது இல்லை.

## கொல்லிமலையிலுள்ள குக்கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கும் திட்டம்.

* வினா எண். 173—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் கொல்லிமலையில் உள்ள 253 குக்கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) கொல்லிமலையிலுள்ள 253 குக்கிராமங்களில் ஐந்து குக்கிராமங்களுக்கு மட்டும் தான் மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அவற்றின் விவரம் பின்வருமாறு:—

(1) செம்மேடு, (2) வசலூர்பட்டி, (3) சோளக்காடு, (4) சேலூர் கஸ்பா, (5) சோளக்காட்டுப்பட்டி.

திரு. சி. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, மீதியுள்ள 250 குக்கிராமங்களுக்கும் எப்போது மின் வசதி அளிக்க அரசு திட்டமிட்டுள்ளது? அல்லது மின் வசதி அளிக்க ரூரல் எலக்டிரிபிகேஷன் கார்ப்பரேஷனிடம் கடன் வாங்கி அந்தக் கிராமங்களுக்கு மின் இணைப்புத் தர அரசு முயற்சிக்குமா?